**O.S. No. 294 /2021**

**Date:06.02 .2026**

**வா.சா.1 செந்தில்குமார்**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் விவரம் கூறிதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் எத்தனை பிராது சொத்துக்கள் காட்டியுள்ளேன் என்றால் 4 தபசில் சொத்துக்களை காட்டியுள்ளேன். முதல் தபசில் சொத்து வீடு ஆகும். க.எண். 57 ஏ, பஜனை மடத் தெரு, வீட்டின் அளவு மற்றும் விஸ்தீரணம் தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்யும் போது மேற்படி வீட்டின் மதிப்பு எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. 2ம் தபசில் சொத்து தறிச்செட்டு க.எண். 79, 79 ஏ தறிச்செட்டின் அளவு மற்றும் விஸ்தீரணம் தெரியாது. தறிச்செட்டில் மொத்தம் 18 தறி இருந்தது . 3வது தபசில் சொத்த வீடு. அது டிஎன் புதுக்குடி 2வது தெருவில் உள்ளது அதன் க.எண். 78 வீட்டின் அளவு மற்றும் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1200 சதுர அடி இருக்கும். 4வது தபசில் சொத்து புளியங்குடி நகரில் பஜனை மடத் தெருவில் முதல் வீடு க.எண்.1 ஆகும். மேற்படி வீட்டின் அளவு மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. மேற்படி வீடு யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது எனது தாத்தா பெயரில் இருந்தது. எனது தாத்தா பெயர் கைலாசமுதலியார். முதலில் கூறிய 1முதல்3 சொத்துக்கள் எனது அப்பா கிரையம் பெற்ற சொத்துக்கள் ஆகும். அதில் க.எண். 78 எண் கொண்ட வீடு எனது தாயார் கிரையம் பெற்ற சொத்து ஆகும். 1 முதல் 4 வரையிலான தபசில் சொத்துககள் எவ்வளவு மதிப்பு போகும் என்றால் எனக்கு தெரியாது. எனது தாத்தா கைலாசமுதலியாருக்கு 3 பெண்குழந்தைகள், 1 ஆண்குழந்தை. பெண் குழந்தைகள் பெயர் 1.வள்ளியம்மாள், 2.ராஜம்மாள், 3.பழனியம்மாள். ஆண் குழந்தை எனது அப்பா சண்முக சுந்தரம் ஆவார். என் கூட பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து 4 சகோதரர்கள், 1 சகோதரி ஆவோம். 2, 3ம் பிரதிவாதிகள் என்னுடைய சகோதரர்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனது தாயார். மற்றொரு சகோதரர் பெயர் கண்ணன். தற்போது அவர் உயிருடன் இல்லை. கண்ணன் என்பவருக்கு திருமணம் ஆன பின்பு தான் இறந்தார் என்றால் சரிதான். கண்ணன் மனைவி பெயர் ராமு ஆகும். அவர்களுக்கு குழந்தைகள் கிடையாது. கண்ணன் என்பவர் எப்போது இறந்தார் என்றால் 30.03.2011 ல் இறந்தார். 2012ம் ஆண்டு ராமுவுக்கு ரூ.2,00,000- கொடுத்து சொத்துக்கள் அனைத்திலிருந்தும் விடுதலை

பெற்றுக்கொண்டோம். ஆவணங்கள் எதுவும் வாங்கியுள்ளீர்களா என்றால் வாங்கியுள்ளோம். மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளோம். என்ன என்ன சொத்திற்கு நான் எத்தனை பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1வது சொத்திற்கு 1/3 பங்கு , 2வது அயிட்ட சொத்திற்கு 1/4 பங்கு, 3வது அயிட்ட சொத்திற்கு 1/3 பங்கு , 4வது அயிட்ட சொத்திற்கு 1/4 பங்கு கேட்டுள்ளேன். எனது அத்தை தற்போது ராஜம்மாள் மட்டும் உயிருடன் உள்ளார். வள்ளியம்மாள், பழனியம்மாள் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள். ராஜம்மாள், வள்ளியம்மாள், பழனியம்மாள் ஆகியோர்களை இந்த வழக்கில் கட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் எனது தந்தை அப்போதே பணம் கொடுத்து வாய்மொழி பாகம் பண்ணிவிட்டார். எந்த வருடம் பாகம் பெற்றார் என்ற விவரம் தெரியாது. ராஜம்மாள், வள்ளியம்மாள், பழனியம்மாள் ஆகியோர்களை இந்த வழக்கில் கட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு 28.03.1995ல் திருமணம் நடைபெற்றது. எனது மனைவிக்கு கோவில்பட்டி. நான் எங்கே வேலை பார்த்தேன் என்றால் 2000ம் வருடத்தில் சென்னைக்கு சென்று கோரமண்டல எலக்ட்ரானிஸில் production பகுதியில் வேலை செய்து வந்தேன். எவ்வளவு சம்பளம் பெற்றேன் என்றால் ரூ.15000/- எனக்கு குழந்தைகள் கிடையாது. 1முதல் 3 பிரதிவாதிகள் தான் தறிசெட்டை பார்த்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். நான் அடிக்கடி வந்து பார்த்துக்கொள்வேன்., பணமும் கொடுப்பேன். சென்னையில் நான் வாடகைக்குத்தான் குடியிருந்து வந்தேன். வாடகை பணம் ரூ. 1500/- முதல் 7000/- வரை கொடுத்துள்ளேன். மாதம் எனக்கு குடும்ப செலவு ரூ. 6000/- 7000/- ஆகும். போக்குவரத்து செலவு ரூ. 2000/- ஆகும். மேற்படி செலவுகள் போக மீதமுள்ள தொகையை தான் எனது அம்மா 1ம் பிரதிவாதியிடம் கொடுத்தேன். 2, 3பிரதிவாதிகளுக்கு குழந்தைகள் இருக்கிறார்கள்.. 2ம் பிரதிவாதிக்கு 1 பெண் குழந்தையும், 1 ஆண் குழந்தையும் உள்ளார்கள். 3 ம் பிரதிவாதிக்கு 1 பெண் குழந்தை மட்டும் உள்ளார். தறிச்செட்டில் எத்தனை நபர்கள் வேலை செய்கிறார்கள் என்றால் சுமார் 20 நபர்கள் வேலை செய்தார்கள். தறிச்செட்டில் வேலை பார்க்கும் தொழிலார்களுக்கு PF பணம் கொடுக்கும் விவகாரத்தில் தொழிலாளர் நல அலுவலகத்தால் நடத்தப்பட்ட வழக்கு முடிந்துவிட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கை எந்த வழக்கறிஞர் வைத்து நடத்தினார் என்றால் 2ம் பிரதிவாதிதான் இந்த வழக்கை பார்த்துக்கொண்டார். மேற்படி வழக்கில் மேல்முறையீடு சென்றுள்ளார்களா

என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், எந்த நீதிமன்றத்திற்கு சென்றுள்ளார்கள் என்ற விவரம் தெரியாது. மேற்படி விவகாரங்களை 2, 3 பிரதிவாதிகள் தான் பார்த்துக் கொள்கிறார்கள். எனது உடன் பிறந்த சகோதரி பெயர் லட்சுமி. லட்சுமி இறக்கும் போது 15 வயது இருக்கும். எனது அப்பா எப்பொழுது இறந்தார் என்றால் 2001 ல் இறந்தார் தேதி மற்றும் மாதம் ஞாபகம் இல்லை. நகராட்சியில் வேலை பார்த்து வந்த ராமகிருஷ்ணன் எனக்கு தெரியும் அவர்எனது சித்தப்பா ஆவார். கருப்பையா முதலியார் மகன் சுப்பிரமணியை தெரியுமா என்றால் பெயர் தெரியாது ஆனால் அந்த நபரை பார்த்துள்ளேன். 30.06.2021ம் தேதியில் ஊர் மத்தியஸ்தர்களான திருமலைக்குமார் மகன் ஆறுமுகன், கருப்பையா குமாரர் சுப்பிரமணியன் , அருணாச்சலம் மகன் பழனி, அருணாச்சலம் மகன் ராமகிருஷ்ணன் ஆகியேர்களின் முன்னிலையில் 1, 2வது சொத்துக்களை வாய்மொழியாக பிரித்துகொண்டோம் என்றால் பேச்சுவார்த்தை இருந்தது ஆனால் முடியவில்லை. 30.06.2021ம் தேதியில் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டதால் தான் 1வது அயிட்ட சொத்து 1, 2 பிரதிவாதிகள் அவர்களுக்குரிய 2/4 பங்கினைப் பொறுத்து 2ம் பிரதிவாதி குமாரரான 4ம் பிரதிவாதிக்கு 30.06.2021ல் 1 பதிவு தான செட்டில் மெண்டு பிறப்பித்துக்கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி 4ம் பிரதிவாதி தான செட்டில் மெண்டு ஆவணத்தை ஏற்றுக்கொண்டு தபசில் 1ம் அயிட்ட சொத்தை அனுபவதித்து வருகிறார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி 1ம்அயிட்ட சொத்தைப்பொறுத்து அவருக்குரிய 1/4 பங்கினைப்பொறுத்து சரியான பிரதிபிரோஜனத்தின் பேரில் 4ம் பிரதிவாதிக்கு 30.06.2021ல் பதிவு கிரைய ஆவணம் பிறப்பித்துன்கொடுத்தார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி பதிவு கிரைய ஆவணத்தின்படியும், செட்டில்மெண்டின் படியும் 3/4 பங்கை அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி சென்னையில் உள்ளார். புளியங்குடியில் இல்லை. 1, 2வது பிரதிவாதிகள் 2/4 பங்கை 01.07.2021ல் ஒரு பதிவு செட்டில்மெண்டு ஆவணத்தை 4ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். 2ம்அயிட்ட சொத்தில் 3ம் பிரதிவாதி

அவருக்குரிய 1/4 பங்கை பொறுத்து 4ம் பிரதிவாதிக்கு 01.07.2021ல் பதிவு கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி 2ம் அயிட்ட சொத்து, பதிவு கிரையம் மூலம் பெற்ற சொத்துக்கள் அனைத்தையும் அவர் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் மற்றும் 4ம் பிரதிவாதிகள் சேர்ந்து 3 ம் பிரதிவாதிக்கு 2ம் அயிட்ட சொத்தில் அவர்களுக்குரிய 2/4 பங்கை 01.07.2021ல் சரியான பிரதிபிரோஜனம் கருதி பதிவு பாகபாத்திய ஆவணம் மூலம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 3வது அயிட்ட சொத்து என் பொற்றோர்களுக்கு பாத்தியப்பட்டது. 3வது அயிட்ட சொத்தில் 1/4 பங்கு மட்டுமே கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தில் கண்ணன் என்பவருடைய சொத்தில் 1/8 பங்கு எனது அம்மாவிற்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. 4வது அயிட்ட சொத்தைப் பொறுத்து எனது அத்தைகளை கட்சியாக சேர்க்காமல் உள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் பிராது தபசில்சொத்தில் மதிப்பு கோடிகளுக்கு மேல் உள்ள நிலையில் மதிப்பை குறைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிலையிலும், அவசிய கட்சிகளை சேர்க்காத நிலையிலும் இந்த 1 முதல் 4 பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

(Sd/–)P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.